1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுராவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மதுராவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது வட்டி வருமானம் ரூபா 30,440 பற்றாக்குறையை சீராக்கப்படாது இருந்ததுடன் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு ரூபா 1,754,348 இற்குப் பதிலாக ரூபா 9,668,713 தொகையும், செலுத்த வேண்டியவைகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 8,917,036 இற்குப் பதிலாக ரூபா 8,582,076 தொகையும், ஏனைய பொறுப்புக்களில் குறைவு ரூபா 302,709 இற்குப் பதிலாக ரூபா 346,210 தொகையும் ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியப் பேரேட்டின் பிரகாரம் வடிகாண் பிரஸ் இருப்பு மீதி ரூபா 2,430 ஆக இருந்த போதும் இருப்புக் கணக்கில் ரூபா 48,988 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் இருப்பு மீதி ரூபா 46,558 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த காகிதாதிகள் இருப்பின் மீதியைக் கணக்கீடு செய்யும் போது கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி சரியாகக் குறிப்பிடப்படாமையின் காரணமாக காகிதாதிகள் இருப்பு மீதி ரூபா 68,357 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(இ)	விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவினப் பெறுவனவுகள் ரூபா 6,899,152 ஆக இருந்த போதும் ரூபா 35,728,509 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645	09 வாகனங்களுக்குரிய சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளது வரையாக்கப்படாது இருந்ததுடன் ஓட்டக் குறிப்புகளின் மூலப் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர் காலத்தில் சம்பவத் திரட்டு புத்தகத்தை நாளது வரையாக்குவதுடன் ஓட்ப் புத்தகத்தின் மூலப் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	10 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனையை	எதிர் காலத்தில் சகல வாகனங்களுக்காகவும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை

மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	எடுக்கப்படும்.	எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,820,313 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 150,222 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	3,784,574	4,794,233	3,464,027	1,330,207	2,850,576	3,124,810	2,260,476	1,263,660
ii.	வாடகை	-	-	-	-	120,000	-	-	-
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	430,000	433,000	433,000	-	920,000	943,610	943,610	-
iv.	ஏனைய வருமானம்	-	-	-	-	10,434,357	736,389	6,818,082	386,052
		--------------	--------------	------------	-------------	--------------	------------	------------	-------------
		4,214,574	5,227,233	3,897,027	1,330,207	14,324,933	4,804,809	10,022,168	1,649,712
		========	=======	========	=======	========	=======	========	========

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,263,660 ஆன ஆதனவரி நிலுவையில் ஆண்டில் ரூபா 707,463 அதாவது 56	2025 இன் மூன்றாவது காலாண்டு வரையில் நிலுவை மீதியில் காணப்பட்ட ஆதன	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	உரிமையாளர்களின் ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ii)	மீளாய்வாண்டிற்காக ஆதனவரி சிட்டையிடல் ரூபா 3,092,336 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 1,001,894 அதாவது 32 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(iii)	ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 718,113 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 122,723 உம், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 89,942 உம் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 39,359 உம் ஆகும்.	2025 ஆம் ஆண்டு முடிவடைவத்கு முன் ஆதனங்களை தடை செய்து உரிய நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(iv)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 386,501 ஆன நீர் வரி நிலுவையில் ஆண்டில் ரூபா 88,134 அதாவது 22 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து உரிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(v)	மீளாய்வாண்டிற்காக நீர் வரி சிட்டையிடல் ரூபா 1,138,839 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 314,593 அதாவது 27 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நிலுவை மீதியில் ரூபா 181,718 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது.	மேற்படி
(ஆ)	**நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,450,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 41,981,790 ஆகும்.	முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை விரைவாக அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2016 திசெம்பர் 31 ஆந் திகதி கெப் வண்டியின் எஞ்ஜினுக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பை தீர்மானிப்பதற்காக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் விபத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள், நபர்கள் மற்றும் பெறுமதி குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இழப்பை மீளளிப்புச் செய்வதற்காக ரூபா 1,168,257 சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த இழப்பீட்டிற்கு மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒத்துழைப்பை வழங்குமாறு கோரி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இழப்பிற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அறவிடல் வேண்டும்.
(ஆ)	2017 ஆம் ஆண்டில் உற்பத்தி உட்பட்டிருந்த வாகனத்தை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு செலவாகிய ரூபா 211,144 பழுதுபார்த்தல் செலவினத்தில் காப்புறுதிக் கம்பனியில் இருந்து மீளளிப்புச் செய்வதற்கு முடியாது இருந்த ரூபா 74,415 நட்டத்தை அறவிடுவதற்கு ஹொரண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது பிரதிவாதி மரணமடைந்ததன் காரணமாக நட்டத்தை அறவிடுவதற்கு முடியாது இருந்தது.	வாகனத்தின் விபத்தில் இழப்பு நட்ட பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.	நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பிரதேச சபைக்குரிய மதுராவல ஹென்றி ஜயவர்த்தன ஞாபகார்த்த பொது நூலகத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தக மெய்மையாய்வின் போது நூலகத்திற்கு உரிய ரூபா 23,015 பெறுமதியான 112 புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அந்த பற்றாக்குறை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி	பொறுப்பு வாய்ந்தவர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இழப்புக்கு பொறுப்பு உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடல் வேண்டும்.

	வரையிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தனியார் கம்பனி ஒன்றினால் கழிவுப் பொருள் கூறுகளாக்கல் மேற்கொள்ளப்படாமல் சுற்றாடலுக்கு விடுவித்தமை தொடர்பாக அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட பரிசோதனையின் பின்னர் குறைபாடுகளை சரி செய்யும் வரை அந்த நிறுவனத்தின் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதற்காக நிறுவனம் மூடப்பட்டிருந்த கால எல்லைக்குரிய ரூபா 108 மில்லியன் நட்டத்தை தீர்ப்பதற்கு அந்த நிறுவனத்தால் மதுராவல பிரதேச சபை அதில் 06 ஆம் பிரதிவாதி தரப்பினராகக் குறிப்பிட்டு 2009 ஆம் ஆண்டில் ஹொரண நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 4323/M இன் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரையிலும் சபையினால் இந்த வழக்கிற்காக 12 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 642,000 சட்ட செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. சபை பிரதிவாதி கையளித்த வழக்கிற்காக சட்ட செலவினமாக அதிக கிரயம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமையாலும், நிதி நட்டத்தை செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமையாலும் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் விசாரணை செய்து ஆலோசனை பெற வேண்டியிருந்த போதிலும் சபை அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முன்னாள் தலைவரால் உள்ளூராட்சி திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தரின் வாய் மூல ஆலோசனையைப் பெற்று 2009.10.09 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	சபை பிரதிவாதியாக பெயர் குறிப்பிட்டு நடாத்திச் செல்லப்பட்டிருந்த வழக்குத் தொடர்பாக தோற்றியிருக்கும் போது உள்ளூராட்சி திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூல ஆலோசனை பெறப்படல் வேண்டும்.
(ஆ)	தெல்கஹவத்த என்ற பெயருடைய பிரதேசத்தில் கிணறு ஒன்றில் அமைந்துள்ள 15x15 அடி காணிப்பகுதி களுத்துறை மேல் நீதிமன்றத்தில் இலக்கம் 122/16F(A) இன் கீழ்	வெளிதரப்பினரால் வரக்கா கொட கிராம சபைக்கு இந்த காணி நன்கொடையளிக்கப் பட்டிருந்ததாகவும் வழக்கிற்கு	மேற்படி

	காணப்படுகின்ற வழக்கு ஒன்றுக்காக பிரதிவாதியாக சபை தோன்றுவதற்கு பதிலாக வழக்கு கட்டணமாக 02 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 79,410 செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணிப் பதிவேட்டில் அந்த காணிப் பகுதி குறிப்பிடப்படாது இருந்ததுடன் சட்ட ரீதியான உரித்து சபைக்கு சொந்தமா எனவும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	சமூகமளிப்பதற்கு சட்ட ரீதியான உரித்து காணப்பட்டிருந்தது.	
(இ)	வரக்காகொட பிரசேத்தில் காணப்படுகின்ற பிரிக்கப்படாத காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட பொது மலசலகூடம் தொடர்பாக இலக்கம் P/5439 என்ற கூறிடல் வழக்கின் போது சபை தரப்பினராக தொடர்புபட்டு 2018 ஆம் நடைபெற்ற 02 வழக்குத் தவணைகளுக்காக ரூபா 11,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் சொத்து ஒன்றாக அந்த ஆவணங்களில் குறிப்பிடப்படாது இருந்ததுடன் சபைக்கு அதன் சட்ட ரீதியான உரித்து காணப்படுகின்றதா என உறுதிப்படுத்தாமல் வழக்கு தவணைகளுக்காக தோன்றியிருந்தனர்.	இந்த காணியின் பிரிக்கப்படாத காணிப் பகுதி பொது மலசல கூடம் ஒன்றை அமைப்பதற்காக வரக்காகொட கிராம சபைக்கு 1970 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது.	சபை பிரதிவாதியாக பெயர் குறிப்பிட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற வழக்கு தொடர்பாக தோன்றும் போது உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூல ஆலோசனை பெறப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டிற்காக பதவியணியினர் சம்பளம் மீளளிப்புச் செய்வதற்காக அதிகமாக கிடைக்கப்பெற்ற ரூபா 8,790,570 மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த தொகை தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.	மேலதிகமாகப் பெறப்பட்ட பணத்தை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும்.
(உ)	2018 மற்றும் 2020 என்ற இரண்டு ஆண்டுகளிலும் காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 587,740 வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை மீதி விரைவாக தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 74 நீர்மாணிகளில் மீளாய்வாண்டின்	புதிய நீர் மாணிகளை ஈடுபடுத்தல் தற்போது மேற்கொள்ளப்படாது	நீர் நுகர்வேர்கள் எண்ணிக்கையை அதிகரித்துக்

	போது 11 மாணிகள் மாத்திரம் விநியோகிகப்பட்டதுடன் ரூபா 204,750 ஆன 63 நீர்மாணிகள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. இந்த நீர்மாணிகளை குறித்துரைத்த காலத்தில் பயன்படுத்தாமையால் செயலிழந்த நிலைமைக்கு உட்படுவதற்கு சந்தர்ப்பம் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	இருந்தமையால் மிகையான பயன்பாட்டிற்கு விடுவிடுக்கும் நீர்மாணிகளின் அளவு சிறிய அளவாக இருந்ததுடன் அதற்காக மாற்று தீர்வும் காணப்படவில்லை.	கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 ஆம் ஆண்டில் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 20,619,845 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நாருத்துபான பல்நோக்குக் கட்டிடத்தில் மாநாட்டு மண்டபத்தை வயது வந்தவர்கள் பகல் காப்பு நிலையம் ஒன்றாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் வயது வந்தோர் அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்யுமாறு உள்ளூராட்சித் திணைக்களம் 2023 யூலை 07 ஆந் திகதி சபைக்கு அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பல்நோக்குக் கட்டிடம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயன்படுத்தப்படுவதுடன் மாநாட்டு மண்டபமாக பயன்படுத்துவதற்கு தேவையான மேடை, ஒலி கட்டுப்பாட்டு முறைமை, விளக்கு போன்ற பிரிவுகளின் துணைப் பாகங்கள் காணப்படாது இருந்தமை மற்றும் முதியோர் பகல் காப்பக நிலையத்தை நிர்மாணிக்கும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விளைவற்று காணப்படுகின்ற ஆதனங்களை பயன்படுத்தக் கூடிய வகையில் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2020 ஆம் ஆண்டில் ரூபா 1,940,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நார்த்துபாண கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையை தொடர்பு படுத்தி எதிர்காலத்தில் இந்த விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	சபையின் காணியை அளவிட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படாது இருந்ததுடன் பொதுக் காணி பிரதேச சபைக்கு உரியதாக இருந்தமைக்கு ஒதுக்கப்பட்டு இனங்காணக்	சபைக்குரிய பொதுக் காணி மற்றும் கிணறுகளை இனங்காணலை மேற்கொண்டு உரிய பெயர் பதாதைகளும் தற்போது பொருத்தப்படுகின்றது.	சபைக்குரிய சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும்.

	கூடிய பிரகாரம் பெயர் பதாதைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	2016 பெப்ரவரி 19 ஆந் திகதி இலக்கம் 01/2016 என்ற மேல் மாகாண உள்ளூராட்சி செயலாளரின் நிர்வாக சுற்றறிக்கையின் 1.1.1 பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள சகல வாகனங்களும் நிறுவனத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் டெக்டர் வண்டி சபையின் பெயரில் கையேற்கப்பட்டிருக்கவில்லை.	டெக்டர் பிரதேச செயலாளரால் இடர் ஆபத்தான சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்துவதற்காக தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தில் உள்ள சகல வாகனங்களையும் நிறுவனத்தின் பெயரில் கையேற்றல் வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானம் காணப்படும் போது நிர்மாணித்தல் தேவையினை இனங்காணாமல் வெளித் தரப்பினரின் தாக்கத்தின் அடிப்படையில் பிரதேச செயலகத்தில் இருந்து வழங்கப்பட்ட ரூபா 3,410,000 நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் நார்த்துபாண காணி மற்றும் வள்பிட்ட மயாண நிலத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு விளையாட்டு மைதானங்களுக்கும் உரிய காணிகளின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	இரண்டு விளையாட்டு மைதானங்களுக்கும் உரிய காணிகளைக் கையளித்தல் நடவடிக்கைகள் பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.	சபையீல் பெயரில் காணப்படாத ஆதனங்கள் சபையின் பெயருக்கு கையேற்றல் வேண்டும்.
(ஈ)	மதுராவல பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள 20 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லையை	மயான நிலங்களை சபைக்கு கையேற்பதற்காக தேவையான சகல நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மயான நிலங்களின் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்க வேண்டியிருந்ததுடன் பாதுகாப்பு வேலி எல்லையும் அமைக்கப்படல் வேண்டும்.

அமைக்க வேண்டியிருந்த போதிலும் 17 மயான நிலங்களை பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இரண்டாம் நிலையின் கீழ் நூலகர் பதவிகள் 02 உம், முகாமைத்துவ உதவியாளர் பதவி 01 உம், வருமானப் பரிசோதகர் பதவி 02 உம், சுகாதார பரிசோதகர் பதவி 01 உம், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவிகள் 02 உம், ஆரம்ப நிலையின் கீழ் சுடலைக் கூடம் செயற்படுத்துனர், சாரதி, பாதுகாவலர், ஆயுர்வேத உதவியாளர் மற்றும் சுகாதார உதவியாளர் பதவிகளில் 01 வீதமும், வேலைக்கள தொழிலாளர், சுகாதார தொழிலாளர் பதவிகள் 02 வீதமும் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	ஊழியர்கள் வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	ஊழியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் வருமானத்தை சேகரிப்பதற்கு நேரடியான பங்களிப்பை வழங்குகின்ற வருமான பரிசோதகர் பதவிகள் 02 இன் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நீதிமன்ற நடவடிக்கைகளின் காரணமான வருமான பரிசோதகர் பதவியை சேர்த்தல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.	வருமான பரிசோதகர் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து வருமானத்தை சேகரிப்பதை முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும்.
(இ)	பல்நோக்கு படையணியின் மூலம் ஆரம்ப நிலையில் வெற்றிடங்களுக்காக 2023 யூன் மாதம் முதல் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் கட்டளையின் அடிப்படையில் பிம்புர தள வைத்தியசாலைக்காக நியமிக்கப்பட்டு சபையினால் அதற்காக ரூபா 847,633 சம்பளம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.	உள்ளூராட்சி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபட்டிருந்த கனிஸ்ட ஊழியர்கள் யாவும் உள்ளபடியான சேவை நிலையங்களுக்கு அனுப்புதல் தற்காலிகமாகக் கைவிடுமாறு மேல் மாகாண ஆளுநரின் செயலாளர் கட்டளை இட்டிருந்தார்.	சபையின் கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களுக்கு சபை மூலம் சம்பளம் செலுத்தாது இருந்தல் வேண்டும்.

(ஈ)	சபையின் சாரதி அல்லாத ஊழியர்கள் 05 பேர்களுக்காக வாகன கடமை கையளிக்கப்பட்டிருந்தது.	சபையில் காணப்படுகின்ற 15 வாகனங்களுக்காக 04 சாரதிகள் போதியளவில் இல்லாது இருந்தமையால் ஏனைய ஊழியர்கள் பதிலீட்டு அடிப்படையில் சாரதியாக நியமிக்கப்பட்டிருந்தனர்.	சாரதி பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் சமூக அபிவிருத்தி மற்றும் வீட்டுத் துறைகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட 20 நோக்கங்களின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 80 செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் மாதம் வரையில் எதிர்பார்க்கப்பட்ட 11 நோக்கங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் தேர்தல்கள் இரண்டு நடாத்தப்பட்டமையால் இந்தக் காலப் பகுதியில் பொதுமக்களை தொடர்புபடுத்தி சமூக சேவைகளை நடாத்துவதற்கு முடியாது இருந்தமை, சபையின் குறைந்த வருமான நிலை உயர்மட்டத்தில் காணப்பட்டமையும் இதற்கான காரணங்களாக இருந்தது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப் பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் குறித்துரைத்த கால எல்லைக்கு ஒரு தடவை அந்த குறிகாட்டிகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் இருந்து இந்த விடயத்தை மேவுகை செய்யும் உத்தியோகத்தர் காணப்படாமையின் காரணமாக இந்த நடவடிக்கைகளை குறித்துரைத்த காலத்தின் போது மேற்கொள்வதற்கு முடியாது இருந்தது.	மேற்படி

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் 21 செயற்பாடுகளின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டிய பிரிவுகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் மாதம் வரையில் 02 கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் விநியோகிகப்பட்ருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமானம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு	2025 ஆம் ஆண்டில் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை அதிகரித்தல் மற்றும் அதன் செயலாற்றலை கட்டி எழுப்புவதற்காக உதவி வழங்குகின்ற செயற்பாடுகளாக அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் சபையின் உள்ளளக் கணக்காய்வினால் காணி கூறிடலை உறுதிப்படுத்துதல், வாகனப் பயன்பாடு, வீதி திருத்தம், வேலைகளின் செயல் முன்னேற்றம், பெறுகைகள், பொதுமக்கள் முறைப்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக போதியளவான கணக்காய்வு மேற்கொண்டு உள்ளகக் கணக்காய்வு ஐயவினா விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் 21 செலவின விடயங்களின் பெறுமதி ரூபா 3,770,000 ஆன பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகையில் எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்டிருக்கவில்லை.	கணக்குகளுக்கு உரியதாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் தொடர்பானது.	பாதீட்டு மதிப்பீடு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் 21 செலவின விடயங்களின் பெறுமதி ரூபா 837,000 ஆன பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகையில் ரூபா 761,316 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்பு பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 76 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	மேற்படி	மேற்படி